# கொழும்புப் பல்கலைக்கழகம்

# கலைப்பீடம்

## மூன்றாம் வருடக் கலைமாணிப்பரீட்சை (பொருளியல்)

## 2016/2017

## இரண்டாம் அரையாண்டுப்பருவ முடிவு

## ECN: 3265 நிதிச்சந்தை

நேரம் <u>இரண்டு (02)</u> மணித்தியாலங்கள்

<u>நான்கு (04)</u> வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்

---

1.

i. ஒரு பொருளாதாரத்தின் சிறந்த செயலாற்றத்திற்காக வரையறுக்கபட்ட நிதியின் வினைத்திறனான செயலாற்றத்திற்கான நிதிச்சந்தைகளின் பங்களிப்பினை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(13 புள்ளிகள்)

ii. படுகடன் சந்தைக்கும் (Debt market) உரிமைமைப்பங்குச் சந்தைக்கும் (Equity market) இடையிலான வேறுபாடுகனள் யாவை?

(12 புள்ளிகள்)

2.

i. வட்டி வீதத்தினை நீர் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துவீர்?

(08 புள்ளிகள்)

ii. உற்பத்தித்திறன் வாய்ந்த முதலீட்டு வாய்ப்புக்களைக் கொண்டுள்ள ஒரு முதலீட்டாளர் இரண்டு வருடங்களுக்காக ரூபா 200,000 கடன்வாங்க விரும்புவதாகக் கருதுக. வருடாந்த வட்டி வீதம் 12 எனக் கருதுக. இரண்டு வருடங்களின் பின்னர் அம் முதலீட்டாளர் செலுத்த வேண்டிய பெறுமதியினைக் கணிப்பிடுக.

(08 புள்ளிகள்)

iii. பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி வட்டிவீதத்திற்கும் முதலீட்டு மட்டத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

(09 புள்ளிகள்)

3.

i. பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி பிணையங்களுக்கான (Bonds) கேள்வியினைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

ii. உமது சொந்த உதாரணங்களைப் பயன்படுத்தி பிணையங்களின் விலைக்கும் வட்டிவீதத்திற்கும் இடையிலன தலைகீழ்த் தொடர்பினை விளக்குக.

(13 புள்ளிகள்)

4.

i. வருடம் ஒன்றிற்கு 15 வீத வட்டியில் கடன் வழுங்கும் ஒருவர் நிலத் துண்டொன்றினைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு நபருக்கு ரூபா 500,000 கடன் வழங்குகின்றார் எனக் கருதுக. எதிர்பார்க்கப்படும் பணவீக்கம் 8 வீதமாக உள்ளது. வருட முடிவில் உண்மையான பணவீக்கம் 11 வீதமாக உள்ளது. இரண்டு தரப்பிற்கும் இடையிலான இந்நிதிக் கொடுக்கல் வாங்கலின் விளைவுகளை எவ்வாறு பரிசீலிப்பீர்?

(10 புள்ளிகள்)

ii. (அ) ரூபா 1,000 பெறுமதியுடைய ஒரு வருட கழிவு பிணையத்தின் முகப் பெறுமதி ரூபா 950 எனக் கருதுக. இப் பிணையத்தின் வருவாய் வீதத்தினைக் கணிப்பிடுக.

(07 புள்ளிகள்)

(ஆ) வருவாய் வீதம் 12 ஆகக் காணப்படுமிடத்து ரூபா 1,000 பெறுமதியுடைய இரண்டு வருட கழிவு பிணையத்தின் மூலம் ஒரு முதலீட்டாளர் உழைக்கக்கூடிய தொகையினைக் கணிப்பீடுக.

(08 புள்ளிகள்)

5. இலங்கைப் பொருளாதாரத்தில் அவற்றின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு பின்வரும் கருவிகளின் சிறப்பம்சங்களை சுருக்கமாக விளக்குக.

i. திறைசேரி உண்டியல்கள் (Treasury Bills) (06 புள்ளிகள்)
ii. திறைசேரிப் பிணையங்கள் (Treasury Bonds) (06 புள்ளிகள்)
iii. ரூபாய்க் கடன்கள்(Rupee Loans) (06 புள்ளிகள்)
iv. இலங்கைஅபிவிருத்தி பிணையங்கள் (Sri Lanka Development Bonds) (07 புள்ளிகள்)

6.

i. 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடியை உருவாக்கிய காரணிகள் எவை?

(12 புள்ளிகள்)

ii. 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் இலங்கைப் பொருளாதாரத்தின் மீது ஏற்பட்ட பின்விளைவுகளை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(13 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் எவையேனும் **நான்கு (04)** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

i. பொருளாதாரத்தில் நிதிச்சந்தையின் பங்களிப்பு

ii. நிதி முறைமையில் பங்குச் சந்தையின் பங்களிப்பு

iii. மெய் வட்டி வீதம்

iv. பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை

v. கடன்கருவிகளின் முதிர்ச்சியின் போது கிடைக்கும் வருமானம்

vi. எதிர்கால சம்பாத்தியத்தின் நிகழ்காலப் பெறுமதி

vii. வருமான வளையி

(தலா 6.25 புள்ளிகள்)